


# ஹெச்.ஐ.வி கிருமி எடைப் பெருக்கம்

## கிருமி எடை பெருக்கம் என்றால் என்ன?

- உங்கள் ரத்தத்தில் உள்ள ஹெச்.ஐ.வி கிருமியின் அளவை தெரிந்துகொள்ள செய்யப்படும் பரிசோதனைதான் ஹெச் ஐ.வி கிருமி எடைப் பெருக்கம் பரிசோதனை. இது கிருமியை எண்ணாது, மாறாக, கிருமி பெருகும்போது ரத்தத்திற்குள் வெளியாகும் பொருட்களின் அளவை அளக்கும்.
- ஹெச்.ஐ.வி பாசிடிவ் என்றால், உங்கள் ரத்தத்தில் ஹெச்.ஐ.வி கிருமி இருக்கிறதென்று அர்த்தம்.
- கிருமி எடை பெருக்கம் குறைவாக இருக்கும் போது நீங்கள் ஆரோக்கியமாக இருப்பது போல உணருவீர்கள். கிருமி எடைப் பெருக்கம் அதிகமாகும்போது நோய் உண்டானது போல உணருவீர்கள்.

## ஹெச்.ஐ.வி கிருமி எடைப் பெருக்க முடிவுகள் எப்படி இருக்கும்?

- உங்கள் ரத்தத்தின் ஒவ்வொரு சி.சி யிலும் எவ்வளவு ஹெச்.ஐ.வி கிருமிகள் இருக்கிறதென்று இந்த ஹெச்.ஐ.வி கிருமி எடைப் பெருக்க முடிவு காட்டும்.
- தற்போதைய ஹெச்.ஐ.வி கிருமி எடைப் பெருக்க பரிசோதனை 50 முதல் 500,000 வரை ரத்தத்தின் ஒவ்வொரு சி.சியிலும் ஹெச்.ஐ.வி இருப்பதனை கணிக்கும். உங்கள் ரத்தத்தில் 50 க்கும் குறைவாக ஹெச்.ஐ.வி கிருமிகள் இருந்தால், "கிருமிகள் தென்படவில்லை" என்றே முடிவுகள் வரும்.
- கிருமிகள் தென்படவில்லையென்றால் உங்களுக்கு ஹெச்.ஐ.வி கிருமி எடைப்பெருக்கம் இல்லையென்றும் சொல்ல முடியாது, நீங்கள் குணமாகிவிட்டீர்கள் என்றும் சொல்ல முடியாது.
- உங்கள் ஹெச்.ஐ.வி கிருமி எடைப் பெருக்கம் 0 வாக இருப்பினும், நீங்கள் ஹெச்.ஐ.வி-யிலிருந்து குணமாகிவிட்டீர்கள் என்று சொல்ல முடியாது, ஏனென்றால், அளக்க முடியாதபடி உள்ள இடங்களில் கூட ஹெச்.ஐ.வி இருக்கலாம். (எடுத்துக்காட்டாக, ஊனீர் நாளம், உறுப்புகள்)

## என்னுடைய கிருமி எடைப் பெருக்கத்தை குறைக்க என்ன செய்ய வேண்டும்?

- ஹெச்.ஐ.வி மருந்துகள் ஹெச்.ஐ.வி கிருமியின் செயல்பாடுகளை குறைத்து, அதன்வாயிலாக கிருமி எடைப் பெருக்கத்தையும் குறைக்கும்.
- உங்கள் கிருமி எடைப் பெருக்கம் 50,000 க்கு மேலாக இருந்தால், உங்கள் மருத்துவரை அணுகி ஹெச்.ஐ.வி சிகிச்சை தேர்வுகளைப்பற்றி ஆலோசனை பெறுங்கள்.



ASAAP
ALLIANCE FOR SOUTH ASIAN AIDS PREVENTION
www.asaap.ca

CATIE
Canadian AIDS Treatment Information Exchange
Réseau canadien d'info-traitements sida
www.catie.ca

## ஹெச்.ஐ.வி கிருமி எடைப் பெருக்கம் என் உடல் நிலையை குறித்து என்ன சொல்கிறது?

- ஹெச்.ஐ.வி கிருமி எடைப் பெருக்க அளவு உங்கள் உடலில் எந்த அளவிற்கு ஹெச்.ஐ.வி சுறுசுறுப்பாக செயல்பட்டு பெருகி வருகிறது என்று கூறும். கிருமி எடைப் பெருக்கம் அதிகமாக அதிகமாக, கிருமி பெருக்கமும் அதிகமாகும், அதனால், உங்கள் நோயும் சுறுசுறுப்பாக செயல்படும்.

- நீங்கள் ஹெச்.ஐ.வி மருந்துகள் எடுத்துக்கொண்டு, அவைகள் சரியாக செயல்பட்டால் கிருமி எடைப் பெருக்கம் குறையும். ஆதலால், ஹெச்.ஐ.வி கிருமி எடைப் பெருக்கமானது நீங்கள் எடுத்துக்கொள்ளும் மருந்துகள் ஒழுங்காக வேலை செய்து கிருமியை கட்டுப்படுத்துகிறதா எனக் கணிக்கும். நீங்கள் ஹெச்.ஐ.வி மருந்துகளை நீண்ட நாட்களாக எடுத்துக்கொண்டு வந்தும், கிருமி எடைப் பெருக்கம் குறையாமல் கண்டுபிடிக்கும் அளவிற்கு இருந்தால், அந்த மருந்துகள் செயல்படவில்லை என்று அர்த்தம். உங்கள் மருத்துவரை அணுகி இன்னும் நன்றாக செயல்படும் வேறு மருந்துகளை எடுத்துக்கொள்வது பற்றி ஆலோசியுங்கள்.

## T4 (CD4) செல்களின் எண்ணிக்கைக்கும் கிருமி எடைப்பெருக்கத்திற்கும் என்ன வித்தியாசம்?

- உங்கள் ஆரோக்கியத்தைப் பற்றியும் ஹெச்.ஐ.வி கிருமி எந்த அளவிற்கு உங்கள் உடலை பாதித்திருக்கிறதென்றும் தெரிவிப்பது இந்த T4 (CD4) எண்ணிக்கை மற்றும் கிருமி எடைப்பெருக்கும்தான். ஆனால் இவை கூறும் விபரங்கள் வெவ்வேறு.
- T4 (CD4) செல்களின் எண்ணிக்கை உங்கள் உடலின் நோய் எதிர்ப்பு சக்தி எந்த அளவிற்கு ஆரோக்கியமாக இருக்கிறதென்று கூறும். ஹெச்.ஐ.வி உங்கள் உடலின் நோய் தடுப்பு சக்திக்கு எந்த அளவிற்கு பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறதென்பதையும் கூறும். மற்ற நோய்களை பற்றிக்கொள்ளும் அபாயத்தை பற்றி எச்சரிக்கை செய்யவும் இது உதவும்.
- கிருமி எடைப்பெருக்கமானது உங்கள் உடலில் ஹெச்.ஐ.வி எந்த அளவிற்கு நன்றாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்று தெரிவிக்கும். அந்த கிருமி எந்த வேகத்தில் பெருகி வருகிறதென்றும் அது கூறும். நீங்கள் எடுத்துக்கொள்ளும் ஹெச்.ஐ.வி சிகிச்சை எந்த அளவிற்கு வேலை செய்கின்றது என்பதையும் இது தெரிவிக்கும்.

ஹெச்ஜவி சம்பந்தப்பட்ட நோய்கள் ம்றறும் சம்பந்தப்பட்ட சிகிச்சைகள் பற்றி முழு தகவல் தெரிந்த பயிற்சி பெற்ற மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மட்டுமே குறிப்பிட்ட மருத்துவ சிகிச்சைகள் பற்றி முடிவெடுக்க வேண்டும்.

தங்களை கவனித்து கொள்பவர்களுடன் சேர்ந்து, உடல் நிலையை தாமே பராமரிக்க விரும்பும் ஹெச்ஜவி/எய்ட்ஸ் நோய் உள்ளவர்களுக்கு தகவல் மற்றும் உதவியை கனடாவின் ஏய்ட்ஸ் சிகிச்சை தகவல் பரிமாற்றம் (CATIE) மற்றும் தெற்காசிய ஏய்ட்ஸ் தடுப்பு நிலையம் (ASAAP) நல்லெண்ணத்துடன் வழங்குகிறது. CATIE(கேட்டி) அல்லது ASAAP (ஏஸாப்) அளிக்கும் அல்லது பிரசுரிக்கும் தகவல்களை பெறுபவர்கள் இதை மருத்துவ ஆலோசனையாக கருதக்கூடாது. குறிப்பிட்ட சிகிச்சைகளை நாங்கள் பின்பற்றவோ, பரிந்துரைப்பதோ இல்லை, பல்வேறு விரிவான தகவல்களை கலந்தாலோசிக்கவே நாங்கள் வலியிறுத்துகிறோம். மருத்துவம் சம்பந்த்ப்பட்ட எந்த ஒரு முடிவையோ, நடவடிக்கையையோ எடுக்குமுன் பயிற்சி பெற்ற மருத்துவரை கலந்து ஆலோசிக்குமாறு வலுவாக வலியிறுத்துகிறோம்.

CATIE அல்லது ASAAP அளிக்கும் அல்லது பிரசுரிக்கும் தகவல்கள் முழுமையானவை அல்லது முற்றிலும் சரியானவை என்பதற்கு நாங்கள் எந்த உத்தரவாதமும் அளிப்பதில்லை. இந்த தகவல்களின் அடிப்படையில் செயல்படுபவர்கள் தங்கள் சொந்த பொறுப்பில் செயல்படலாம். இத்தகைய தகவல்களிலிருந்து பெறும் பயன் அல்லது அவபயன்களால் ஏற்படக்கூடிய எந்த ஒரு சேதத்திற்கும் CATIE அல்லது ASAAP அல்லது கனடாவின் பொது சுகாதார ஏஜென்சியோ, அதன் ஊழியர்களோ, இயக்குநர்களோ, அதிகாரிகளோ, அல்லது தொண்டர்களோ, பொறுப்பாக மாட்டார்கள். CATIE அல்லது ASAAP மூலமாக கிடைக்கும் அல்லது பிரசுரிக்கப்படும் கட்டுரையின் கருத்துக்கள் முற்றிலும். ஏழுத்தாளரின் கருத்துக்கள் ஆகும், இது CATIE அல்லது ASAAP யின் கொள்ளகைகளையோ கருத்துக்ளையோ பிரதிபலிப்பதில்லை. கனடாவின் எந்த ஒரு பொது சுகாதார ஏஜென்சியின் கருத்துக்களையும் இது பிரதிபலிப்பதில்லை.

Copyright: This Fact Sheet is made available through a collaboration between Alliance for South Asian AIDS Prevention (ASAAP), Asian Community AIDS Services (ACAS) and the Canadian AIDS Treatment Information Exchange (CATIE). Original content developed by ACAS, 2001. Translation into Punjabi and Tamil by ASAAP, 2006.

This information is also available in Chinese, Tagalog and Vietnamese www.acas.org
Funding has been provided by the Public Health Agency of Canada
Supported by an unrestricted educational grant from GlaxoSmithKline in partnership with Shire BioChem